# தேர்ந்தெடுக்கப்பட்ட **Product Link™ Telematics** மற்றும் **Cat** கருவிக் கட்டுப்பாட்டுத் தொகுதி **(ECM)** மென்பொருளுக்கான மென்பொருள் புதுப்பித்தல் செயல்முறை

உங்கள் தொழில் கூட்டாள்ரகளான Caterpillar மற்றும் உங்கள் Cat® வணிகர் ஆகியோர் உங்களுக்கு மிகச் சிறந்த தொழில்நுட்ப வழங்கல்கள் மற்றும் சிறப்பான சேவையை வழங்குவதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ளார்கள். உங்களுடைய தயாரிப்பின் கட்டமைப்பு மற்றும் சேவைத் தேர்ந்தெடுப்புகள் அடிப்படையில், எங்கள் தொலைசேவைகள் உங்களுக்குப் பல்வேறு திறன்களை வழங்கி ஆற்றல் அளிக்கின்றன. அவற்றில் சில:

- மென்பொருள் தொலைமேம்பாடுகள், இவை வான் வழியாகக் கோப்புகளைத் தொலைமுறையில் உங்கள் பொருளுக்கு நேரடியாக அனுப்புவதன்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட Product Link™ telematics மற்றும் Cat ECM (கருவிக் கட்டுப்பாட்டுத் தொகுதி) மென்பொருட்களைப் புதுப்பிக்கும் திறனை உங்களுக்கு வழங்குகின்றன
- தொலைபிழைகண்டறிதல்
- உள்ளூர்ச் சேவைகள் (இவை WiFi எல்லைக்குள் இருக்கும் கருவிகளைப் பழுது பார்க்க அனுமதிக்கின்றன)

இந்த ஆவணம், Product Link Telematics மற்றும் Cat ECM மென்பொருளுக்கான மென்பொருள் தொலைமேம்பாடுகளைக் கையாளும் எங்கள் வழக்கங்களை விளக்குகிறது. மென்பொருள் தொலைமேம்பாடுகள் Caterpillar வாடிக்கையாளர்களுக்கு இவ்வழிகளில் மதிப்பை வழங்குகின்றன:

- கருவியை அணுகுவதற்கென்று அந்த இடத்துக்குப் பயணம் செய்யும் தேவையைக் குறைத்தல்,
- வாடிக்கையாளர்கள் தங்கள் Cat வணிகர்களிடமிருந்து வேண்டுகின்ற ஆதரவுச் சேவைகளுக்கான செலவைக் குறைத்தல்,
- சிக்கல்களை இன்னும் விரைவாகச் சரிசெய்வதன்மூலம் செயல்பாட்டு நேரத்தைக் கூட்டுதல்,
- இன்னும் செயல்திறன் மிக்க ஆதரவுக்கு ஆயத்தமாதல், மென்பொருள் மற்றும் சொத்துச் செயல்திறன் மேம்பாடுகள், இன்னும் பலவற்றுக்கான இன்னும் மேம்பட்ட, இன்னும் நம்பகமான தரவுகளை வழங்குதல்.

**நான் மென்பொருள் புதுப்பிப்புகளை எப்படிப் பெறலாம்?**

நாங்கள் உங்கள் தேர்ந்தெடுப்புகளை மதிக்கிறோம், உங்கள் Product Link Telematics மற்றும் Cat ECM மென்பொருளின் மதிப்பை அதிகபட்சமாக்க எங்கள் தொலைசேவைகளைக் கையாள்கிறோம், Caterpillar மற்றும் உங்கள் Cat வணிகருடனான உங்கள் ஆதரவு உறவைச் சிறப்பாக்குகிறோம், பொருந்தும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குகிறோம். 'ஓர் அடிப்படைக் கொள்கையாக, Caterpillar தன் நம்பிக்கை சார்ந்த செயல்பாடுகளைப் பயன்படுத்தி, நடைமுறை சாத்தியமான அளவில் விரைவாகப் புதுப்பிப்பு அறிப்புகளை

உங்களுக்கு வழங்குகிறது. அறிவிப்பானது புதுப்பிப்புக்குப் பொருந்தும் வகையில் பலவிதமான வழிகளில் வழங்கப்படலாம். இந்த வழிகளில் சில: மின்னஞ்சல் வழியாக, உங்கள் வணிகர் வழியாக, அல்லது, மொபைல் அல்லது இணையம் அடிப்படையிலான ஒரு செயலியின் வழியாக. உங்களுடைய மிகச் சமீபத்திய தொடர்புத் தகவல்கள் எங்களுக்குக் கிடைத்தால்தான் எங்களால் உங்களுக்கு இதுபோன்ற அறிவிப்புகளை வழங்க இயலும். பொதுவாக, புதுப்பித்தல்களுக்கான தகவல் தொடர்புச் செயல்முறையானது செய்யப்படும் மாற்றத்தின் வகையைப் பொறுத்து அமைகிறது. அது இங்கு விவரிக்கப்பட்டுள்ளது:

**வழக்கமான சிறு புதுப்பிப்புகள்:** Telematics கருவிகளில் செய்யப்படும் வழக்கமான மற்றும் ஆபத்து குறைந்த புதுப்பிப்புகளைப் பொறுத்தவரை, Caterpillar தன்னுடைய நன்னம்பிக்கை முயற்சிகளைப் பயன்படுத்தி உங்களுக்கு முன்கூட்டிய அறிவிப்பை வழங்கும், ஏதாவது ஒரு காரணத்தால் நீங்கள் அந்தப் புதுப்பிப்பைப் பெற விரும்பாவிட்டால், அதை இயக்காமல் இருப்பதற்கான தெரிவையும் உங்களுக்குக் கொடுக்கும். அதுபோன்ற வழக்கமான புதுப்பிப்புகளில் சில: பிழைத் திருத்தங்கள், சிறு புதுப்பிப்புகள், அம்ச மேம்பாடுகள் மற்றும் செயல்திறன் மேம்பாடுகள்.

**மிகப் பெரிய புதுப்பிப்புகள்:** ஒரு மாற்றப் புதுப்பிப்பின் தாக்கம் ஒரு சிறு புதுப்பிப்பைத் தாண்டும்போது, நீங்களோ உங்களுடைய சேவைத் தொழில்நுட்ப வல்லுனரோ (இது ஒரு வணிகர் தொழில்நுட்ப வல்லுனராக இருக்கலாம்) ஒப்புதல் வழங்கப்பட்ட மொபைல் அல்லது இணைய அடிப்படையிலான செயலியைப் பயன்படுத்தி, அல்லது, நீங்கள் புதுப்பிப்புக்கு ஒப்புக்கொள்கிறீர்கள் என்பதை உறுதிசெய்யும்வகையில் வடிவமைக்கப்பட்ட மற்ற வழிகளில் அந்தப் புதுப்பிப்பைச் செயல்படுத்தியபிறகுதான், பொருளானது அதைச் செயல்முறைப்படுத்துவதற்கான பாதுகாப்பான நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்தியபிறகுதான் அந்தப் புதுப்பிப்பு நிறுவப்படும். ஒரு மிகப் பெரிய புதுப்பிப்பில் பின்வரும் சூழ்நிலைகளில் ஏதேனும் ஒன்று இடம்பெறலாம்:

- கட்டுப்பாட்டு ECMல் (எஞ்சின், அனுப்பும் அமைப்பு போன்றவை) புதிய மென்பொருளைச் சேர்த்தல்
- ஒரு கட்டுப்பாட்டு ECMன் கட்டமைப்பு அளவுருவைத் தொலைவிலிருந்து மாற்றுதல்
- ஓர் அம்சம் அல்லது மென்பொருளால் இயக்கப்பட்ட இணைப்பை இயக்குதல்
- வாடிக்கையாளருக்குக் கூடுதல் செலவுகளை உண்டாக்குகிற அல்லது திரட்டப்படும் தனிப்பட்ட தகவல்களைக் குறிப்பிடக்கூடிய வகையில் மாற்றுகிற விதத்தில் சந்தா நிலைகளை மாற்றுதல்
- Telematics மென்பொருளில் சொத்தைப் பாதிக்கிற மிகப் பெரிய புதுப்பிப்புகள், எடுத்துக்காட்டாக, telematics நிலைபொருளில் அல்லது அமைப்புக் கட்டுப்பாட்டுத் தொகுதியின் தொலைவிலிருந்து கட்டமைக்கக்கூடிய பகுதியில் சொத்து அல்லது அமைப்பின் செயல்திறனை மாற்றக்கூடிய ஒரு மாற்றம்

பாதுகாப்பு அல்லது பத்திரத்தன்மையை மேம்படுத்தும் புதுப்பிப்புகள்: ஒரு இயந்திரம் அல்லது ஓர் அமைப்பின் பாதுகாப்பான அல்லது பத்திரமான செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு ஒரு புதுப்பிப்பு தேவை என்று கருதப்பட்டால், புதுப்பிப்பு செய்யப்பட்டபிறகு நாங்கள் உங்களுக்கு அறிவிக்கக்கூடும்.

**தகவல் தொடர்புப் புதுப்பிப்புகள்:** தொழில்துறை வழக்கத்தின்படி, Caterpillar மற்றும் எங்கள் செல்லுலார் வலைப்பின்னல் வழங்குநர்கள் உங்களுக்கு அறிவிப்பு வழங்காமல், அல்லது, Product Link ஆவணங்களில் விளக்கப்பட்டுள்ளபடி தொலைவிலிருந்து இவற்றைப் புதுப்பிக்கலாம்: கருவியின் செயல்பாட்டைப் பாதிக்காத அல்லது மேலுள்ள இன்னொரு வகையின் நிலைக்கு உயராத அளவுருக்கள்; எடுத்துக்காட்டாக வலைப்பின்னல் உலாவல் பட்டியல், தரவுப் பண்புகள், அல்லது உங்கள் Product Link™ telematicsல் உள்ள SIMல் (சந்தா செலுத்துபவர் அடையாளத் தொகுதி) உள்ள மற்ற வலைப்பின்னல் தகவல்கள்.

## Caterpillar இணைக்கப்பட்ட பொருள் தரவுக் கொள்கைகள் மற்றும் தரவு ஆட்சி அறிக்கை

தொலைசேவைகள் உள்ளிட்ட எங்களுடைய பல டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகள் பொருள் இணைப்பு மற்றும் இணைப்பின்மூலம் இயக்கப்படும் தரவு மற்றும் வான்வழியான அணுகலைச் சார்ந்துள்ளன. இணைக்கப்பட்ட பொருள் தரவைத் திரட்டுதல் மற்றும் கையாளுதலுக்கான எங்கள் பழக்கங்களைப்பற்றிய கூடுதல் தகவல்களை Caterpillar பன்னாட்டுத் தரவுத் தனியுரிமை அறிக்கை, உங்கள் டிஜிட்டல் வழங்கல் சந்தாக்களுக்குப் பொருந்தும் எந்த ஒரு தனியுரிமை அறிக்கைகள், மற்றும் Caterpillar தரவு ஆட்சி அறிக்கையில் காணலாம். நாங்கள் எந்தத் தகவல்களைத் திரட்டுகிறோம், அதை எப்படித் திரட்டுகிறோம், பயன்படுத்துகிறோம், தொலைசேவைகளுடனான அவற்றின் உறவுகள் போன்றவைபற்றியும், மற்ற பழக்கங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ள இந்த ஆவணங்களை அணுகுங்கள்.

## நான் மேலும் தெரிந்துகொள்வது எப்படி?

CatConnectSupport@cat.com உங்கள் Cat வணிகரிடம் பேசுவதன்மூலமோ தொலைசேவைகளைப்பற்றி மேலும் அறியலாம், அவற்றின் பலன்கள், அவை எப்படி இயங்குகின்றன, உங்கள் Product Link Telematics மற்றும் Cat ECM மென்பொருளுக்கு ஏதேனும் புதுப்பிப்புகள் உள்ளனவா என்றெல்லாம் தெரிந்துகொள்ளலாம்.